

வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை சைவ சிங்க மாப்பாண
முதலியார் குலத் தோன்றலும் குலவிளக்குமாகிய எங்கள்

அமரர்

# திருமதி பராசக்தி இராஜரட்ணம்

அவர்களின் சிவபதப் பேறுகுறித்து ஒளிரும்

# "சக்தி தீபம்"

12.06.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்





வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை
சைவ சிங்க மாப்பாண முதலியார் குலத்தோன்றலும்
குலவிளக்கமாகிய எங்கள்

அமரர்

# திருமதி இராஜரட்ணம் பராசக்தி


அவர்களின்

சிவபதப்பேறு குறித்து ஒளிரும்

# சக்தி தீபம்

## 12.06.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

மனிதருள் மாணிக்கமாய்
அன்பும் அறனும் பொதிந்த
இன்சொல் பேசி இனியபண்பும்
பாசமும் உடையவராய்
இன்முகம் காட்டி இன்பமுடன் வாழ்ந்து
இன்று தெய்வமாகி விட்ட
எம் அன்னையின் பாதார
விந்தங்களுக்கு இம்மலரை
அன்புக் காணிக்கையாக்குகிறோம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் யாரெமக்குப் பாரினிலே
ஏதாயினும் வழிநீ சொல்வாய் எமதுயிரே
வேதாவில் தாயே மிகப் பணிந்து வாழ்வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



பராசக்தியாக
02.02.1916

பரமன் சக்தியாக
13.05.2011

அமரர்

# திருமதி பராசக்தி இராஜரட்ணம்

அவர்கள்

## திதி வெண்பா

கரவாண்டு சித்திரைத்திங்கள் வெள்ளி தன்னில்
பூர்வபக்க ஏகாதசித் திதியதனில்
மண்ணகம் விட்டு சென்றனர் விண்ணகம்
கண்கலங்கி நாமெல்லாம் கதறிடவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தோத்திர மாலை



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

இடரினுந் தளரினு மெனதுறு நோய்
தொடரினு முனகழ றொழுதெழு வேன்
கடறணி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதி யனே
இதுவோவெமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடு துறையரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயினும் நல்ல தலைவ ரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலைஅமர்ந் தாரே.

## திருவாசகம்

கண்களிரண்டும் அவன் கழல்
கண்டு களிப்பன ஆகாதே
காரிகை யார்கள் தம் வாழ்வி லென்
வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு
மாறு மறந்திடும் ஆகாதே
மாலறியாமலர்ப் பாத
மிரண்டும் வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை
ஆட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம்
வந்து வெளிப்படும் ஆகாதே
மீன்வலை வீசிய கானவன்
வந்து வெளிப்படும் ஆயிடிலே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்சே யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசர்க்கு
ஆட் செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

# திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

# அற்புதத் திருவந்தாதி

பிறந்து மொழி பயின்று பின் எல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்.

# பெரிய புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் னான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்து வாழ் சடையா னாடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

திரு மகளுலாவு மிருபுய முராரி
திரு மருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானும் மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடியார்கள் மனதில் விளையாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவு கதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு பட அசுரர் மாள
அமர் பொருத வீரப் பெருமாள்காண்
அறுகுபிறை வாரி விரவுசடை யீசர்
அருள் செய்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினை விடாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

உலகம் எல்லாம் உயர் நலம் பெருகுக!
அகிலம் எங்கும் அமைதி நிலவுக
பாருல கெங்கும் பூரணம் பொலிக
பொங்கும் மங்களம் எங்கும் தங்குக
அஸத்தற நீங்கி ஸத்தே வருக
இருளற நீங்கி ஒளியே வருக
வீழ்வது நீங்கி வாழ்வே வருக
பிரிவினை நீங்கி உறவே வருக .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திருமதி இராஜரட்ணம் பராசக்தி

அவர்களின்

# வாழ்வியல்

சிவபூமினெனப் போற்றப்படும் ஈழவழ நாட்டின் வண்ணார் பண்ணை, வடமேற்கு, ஆனைக்கோட்டை தன்னில் சிங்க மாப்பாண முதலியார் குலத்தோன்றலில் சிவனடி மறவாச் செம்மலாம் நாகலிங்கம் தங்கம்மா அவர்களுக்குக் கந்தன் கருணையினால் கனிஷ்ட புதல்வியாக 1916ஆம் ஆண்டு மாசித் திங்கள் 02ஆம் திகதி அவதரித்தார் அமரர் பராசக்தி.

இவருடன் திரவியம், கண்மணி ஆகிய இரு பெண் சகோதரிகளும், திருநாவுக்கரசு ஆகிய இளைய ஆண் சகோதரரும் அவதரித்தனர். இவர்கள் அனைவரும் சிறு வயதிலே அன்பும் பாசமும் காட்டி இன்புற்று வாழ்ந்துவரும் நாளில் இவரது மூன்றாவது வயதில் தந்தையாரை இழந்து விடத் தாயாரின் அரவணைப்பிலேயே வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் தான் பிறந்த ஊர்ப்பாடசாலையிற் கல்வி கற்று வரும் நாளில் தனது பதினாறாவது வயதில் தாயாரையும் இழந்துவிட்டார்.

இவரின் சகோதரியாகிய திரவியம் வளர்ந்து திருமணப் பருவம் எய்தியபோது வரலாற்றுச் சிறப்புப்பெற்ற மாவிட்டபுரம் என்னும் பதி தன்னில் வசித்தவரும், இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற் கடமையாற்றியவருமாகிய இராஜரட்ணம் அவர்களைத் திருமணம் செய்து இன்புற்று வாழும் நாட்களில் சிவயோக நாயகி, அருளானந்தம் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பிள்ளைகளைப் பெற்று இல்லறம் சிறந்து வாழ்ந்து வந்தனர். சிலகாலம் கடந்த பின் இவர்களின் தாயாராகிய திரவியம் என்பவரைக் காலன் கவர்ந்து விடவே தந்தையாராகிய இராஜரட்ணம் மாவிட்டபுரத்திலேயே தனது பிள்ளைகளுடன் தன்சகோதரியின் உதவியோடு வாழ்ந்து வந்தார். சில காலங்களின் பின் கவலைகள் மறந்து வாழுங்கால் பெரியோர்களின் ஆலோசனைகளுக்கும் விருப்பத்திற்கும் அமையவும் இருபிள்ளைகளின் சிறப்பை நோக்கியும் இராஜரட்ணம் அவர்கள் அமரர் பராசக்தி அவர்களை மறுமணம் செய்து வாழ்ந்துவந்தனர்.

"அன்பும் அறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது"

என்ற வாக்கிற்கமைய, தனது இரு பெறாமக்களுடனும் அன்பொடு அறம் செய்து இல்லறம் சிறந்து வாழ்ந்தார் அமரர் பராசக்தி. இவரது கணவர் அரச பணியில் சேவையாற்றிய படியால் மாற்றலாகிச் செல்லும் இடங்கள் தோறும் குடும்பமாகச் சென்று இருந்து இன்புற்று வாழ்ந்துவரும் வேளையில் தையல்நாயகி, தில்லைநாயகி ஆகிய இரு பெண் பிள்ளைகளைப் பெற்றதோடு தான் பிறந்த ஊராகிய ஆனைக்கோட்டையில் தங்களுக்கென ஓர் இல்லம் அமைத்து தமது நான்கு பிள்ளைகளுடனும் வாழ்ந்து வந்தனர். குல தெய்வமாகிய ஞானவைரவரின் கருணையினால் தான் இன்பமாக வாழ நேர்ந்துள்ளது என எண்ணி, அக்கோவில் விழாக்களில் பங்குபற்றுவதோடு, சிவராத்திரி தினத்தன்று வைரவப் பெருமான் நகர ஊர்வலம் வந்தருளும் விழாவாகவும் செய்வித்தும் வந்தார். அத்தோடு அக்கோவில் வாசலில் நல்லூர் தேர், தீர்த்த திருவிழாக்காலங்களில் தண்ணீர்ப்பந்தல் அமைத்து அவ்வீதியால் செல்லும் அடியார்களுக்குத் தாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தியும் வருடாவருடம் செய்து வந்தார். இப்பணியைத் தம் பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து தொடரவேண்டும் என்றும் தம்மக்களைப் பணித்துள்ளார். இவ்வாறு இல்லறம் சிறந்து வரும் நாளில் கருணாநிதி, மகாலட்சுமி, தயாநிதி, குணாநந்தன் ஆகிய பிள்ளைகளையும் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ்ந்தனர்.

தன் இல்லம் நோக்கி வருகின்ற உற்றார், உறவினர் யாவரையும் இன்முகம் காட்டி வரவேற்று உபசரித்து, இன்முகத்தோடு விருந்தளித்து இன்புறுவார். இவர் தம்மக்களுக்கு அறிவூட்டிச் சிறந்த போதனைகளை ஊட்டி அறிவுக்கு முதல் அத்திவாரமிட்டு ஆசானாக இருந்து ஒளியூட்டிய உத்தமராக விளங்கினார்.

மூத்தவராகிய சிவயோகநாயகி திருமணப் பருவமெய்திய போது திருகோணமலையைச் சேர்ந்த சுங்கத்துறையில் களஞ்சியப் பொறுப்பாளராகச் சேவையாற்றிய சபாரட்ணம் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தனர். அவர்கள் இன்புற்று பிரேமாவதி, கமலாவதி ஆகிய இரு பெண் குழந்தைகளையும், கிருஸ்ணகுமார், நந்தகுமார் ஆகிய இரு ஆண்குழந்தைகளையும் பெற்று இன்பமாக வாழ்ந்து வந்தனர். சிலகாலத்தின் பின் தந்தையாரைக் குழந்தைகள் இழந்த போதும் தாயாரின் அரவணைப்பில் சிறப்புற்று; உத்தமர்களாக உலகம் போற்றும் வண்ணம் வளர்ந்து வந்தனர். மூத்தவராகிய பிரேமாவதி கூட்டுறவு உத்தியோகத்தவர் உதயன் என்பவரைத் திருமணம் செய்து சுதாகர், அர்ச்சுன் என்னும் இருபுதல்வர்களைப் பெற்றெடுத்தனர். அடுத்த வராகிய கமலாவதி இலங்கை வங்கியில் கடமையாற்றி எழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைஞர் பூலோக சிங்கத்தைத் திருமணம் செய்து கீர்த்தி என்னும் புதல்வனைப் பெற்றெடுத்தார். அடுத்த புதல்வராகிய கிருஸ்ணகுமார் 'பிறிமா' நிறுவன முகாமையாளராய் கடமையாற்றி சியாமினி என்பவரைத் திருமணம் செய்து கௌஷிகா, ஹம்சிகா, கிருஷிகா என்னும் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தார். இளைய புதல்வர் நந்தகுமார் கமலினி என்பவரைத் திருமணம் செய்து ஹரிஷ், ஆகாஷ் எனும் இரு புதல்வர்களைப் பெற்று லண்டனில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகின்றார்.

அடுத்தவராகிய புதல்வர் அருளானந்தம் கல்வி கற்று பொலிஸ் திணைக்களத்தில் எழுதுனர் பதவியை ஏற்றுச் சிறப்புடன் வாழும்போது பெரியோரின் ஆசீர்வாதத்துடன் மைத்துனியாம் உத்தமி தங்கேஸ்வரியை இல்லறத் துணைவி யாகப் பெற்று யசோதரா, முரளிதரன், கெங்காதரன், இராஜேந்திரன், பிரபாகரன் ஆகிய பிள்ளைகளைப் பெற்று இல்லறம் சிறந்து இன்புற்றிருந்தனர். அவர்களின் மூத்த புதல்வியாகிய யசோதரா உபதபால் அதிபராக யாழ். கடைவீதி உபதபாலகத்தில் கடமையாற்றி, யாழ். நகர சபையின் இலிகிதராகக் கடமையாற்றும் போலிங்கம் என்பவரைத் திருமணம் செய்து கோபிசாளினி என்னும் புதல்வியைப் பெற்று இன்புற்று வாழ்ந்து வருகின்றார். அடுத்தவராகிய முரளிதரன், ரதிதேவி என்பவரைத் திருமணம் செய்து கிருஸ்ணப்பிரியா, கார்த்திகன் ஆகிய இரு பிள்ளைகளைப் பெற்று, கனடாவில் வாழ்ந்து வருகின்றார். அடுத்தவராகிய கங்காதரன், ராகினியைத் திருமணம் செய்து துளசி, துசிந்தன் ஆகிய இருபிள்ளைகளைப் பெற்று இன்புற்று இல்லறம் நடாத்தி வருகின்றனர். அடுத்தவராகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜேந்திரன் கூட்டுறவுப் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றி ஆசிரியை குமுதினி என்பவரைத் திருமணம் செய்து அஜந்தா, பிருந்தா ஆகிய இரு புதல்விகளைப் பெற்று இன்பமாக இல்லறம் நடாத்தி வருகின்றார். இளையமகன் பிரபாகரன் புகையிரதத் திணைக்களத்தில் புகையிரதப் பாதுகாவலராகக் கடமையாற்றி, கோணேஸ்வரி என்பரைத் திருமணம் செய்து துஷீபன், நிதுஜனன் ஆகிய இருபுதல்வர் களைப் பெற்று இன்புற்று வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவரினதும் தந்தையார் அருளானந்தன் காலமாகிவிடத் தாயார் பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகின்றார்.

அமரரின் அடுத்த மகளாகிய தையல்நாயகி பிடாரி கோவிலடி, உபதபால் அதிபராகக் கடமையாற்றி, கொழும்புத் துறை மின் அத்தியட்சகராகிய வரதராஜன் ஆறுமுகம் என்பவரைத் திருமணம் செய்து தயானுஷா என்னும் மகளைப் பெற்றனர். மூத்த புதல்வியார் தையல்நாயகி பொறுமையில் பூமாதேவியை மிஞ்சும் அளவிற்கு உத்தம குணம் படைத்தவர். தனது இளைய சகோதரர்களுக்கு வழிகாட்டியாகவும், இறுதிவரை தாயாரை ஒரு குழந்தையைப் பராமரிப்பது போலவும் பராமரித்து வந்தார். தொழில் நிமித்தம் மற்றைய சகோதரர்கள் வெளியிடங்களுக்குச் சென்றதனால் தன்னுடனேயே தாயாரை இறுதி மூச்சுவரை கண்போலப் பாதுகாத்து வந்தார். மகள் தயானுஷா கல்வி கற்று பல்கலைக்கழகப் பட்டம் பெற்றுத் தாயார் ஓய்வுபெற்ற பின் அதே உபதபால் கந்தோரில் உபதபால் அதிபராகக் கடமை யாற்றி திருகோணமலையைச் சேர்ந்த போதகர் வண.கி.ராஜ்குமார் என்பவரைத் திருமணம் செய்து இன்புற்று வாழ்ந்து ரூபிதன், ராகவி ஆகிய இரு பிள்ளைகளைப் பெற்று வாழ்ந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த மகளாகிய தில்லைநாயகி ஆசிரியையாகத் திருகோணமலையில் பணியாற்றி இறுதியில் மானிப்பாய், இந்து மகளிர் கல்லூரியிற் பணியாற்றி, தற்போது ஓய்வு பெற்றுள்ளார். அடுத்த மகனாகிய கருணாநிதி தபால் அதிபராகக் கடமையாற்றி மானிப்பாயைச் சேர்ந்த ரதிதேவியை மணம்புரிந்து துஸ்யந்தி, ஜனார்த்தன் ஆகிய இரு பிள்ளைகளைப் பெற்று லண்டனில் இன்புற்று வாழ்ந்து வருகின்றனர். மகள் துஸ்யந்தி திருகோணமலையைச் சேர்ந்த ரஜீவன் என்பவரைத் திருமணம் செய்து லண்டனில் வாழ்ந்து வருகின்றார். மகனாகிய ஜனார்த்தன் லண்டனிலேயே கற்றுத் தொழில் புரிந்து இன்பமாக வாழ்ந்து வருகின்றார்.

அடுத்த மகளாகிய மகாலட்சுமி காரைநகர் மாப்பாண புரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசுமாகிய செல்வநாயகம் (ஜே.பி.யு.எம்.) என்பவரைத் திருமணம் செய்து சந்தோஷமாக வாழ்ந்துவரும் வேளையில் கடந்த 2006ஆம் ஆண்டு திடீர் நோய்வாய்ப்பட்டு செல்வநாயகம் அவர்கள் காலமானார். அவர் காலமானதில் இருந்து தன் மகளின் நிலையை நினைந்து அமரர் பராசக்தி அவர்கள் மிகவும் கவலையடைந்தவராகக் காணப்பட்டார். கணவரை இழந்து நிற்கும் தன் மகளிற்கு இறுதிவரை சகல உதவிகளையும் தான் செய்தது மட்டுமல்லாது, தன் மற்றைய பிள்ளைகளையும் இவருடன் ஒற்றுமையாக இருந்து அவரிற்குத் துணையாக இருக்கவேண்டுமென்றும் இறுதிவரை கூறிவந்துள்ளார்.

இவரிற்கு அடுத்தவராகிய தயாநிதி (சந்திரன்) பிரபல வர்த்தக நிலையமாகிய சந்திரா ஸ்ரோஸ் உரிமையாளராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கி, தந்தையார் விட்டுச் சென்ற குடும்பத்திற்கு சுமைதாங்கியாக இருந்ததோடு, தாயாரின் எண்ணக் கனவுகளை ஏற்று இன்முகத்தோடு எல்லோர் உள்ளங்களையும் கவர்ந்து வாழ்ந்து வருவதோடு அன்னை காட்டிய வழியில் நின்று,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த மைத்துனி முறையான புஷ்பராணியைத் திருமணம் செய்து யதிசங்கர், கஜேந்திரன், துவாரகன் ஆகிய புதல்வர்கள் மூவரைப் பெற்று வாழ்கின்றார். அத்தோடு ஸ்ரீ வீரமா பிடாரி அம்மன் தேவஸ்தான பரிபாலனசபையில் பொருளாளராகவும் கடமையாற்றி வருகின்றார். மூத்த மகனாகிய யதிசங்கர் வெளிநாட்டில் கல்வி கற்பதற்குரிய ஏற்பாடுகள் செய்து வருகிறார். அடுத்தவராகிய கஜேந்திரன் தந்தையாருடன் இணைந்து சந்திரா ஸ்ரோஸ் நிறுவனத்தினை வழிநடத்தி வருகிறார். அடுத்தவராகிய துவாரகன் லண்டனில் கணக்கியல் முகாமைத்துவ மாணவனாகக் கல்விகற்று வருகிறார்.

இளையவராகிய குணானந்தன் இலங்கை வங்கியில் தொழில்புரிந்து வரும் நாளில் கொக்குவிலைச் சேர்ந்த மக்கள் வங்கியில் கடமையாற்றும் சிவநாயகியை மணம்புரிந்து தனுஷா, உதயணன், கார்த்திக், பிரசன்னா ஆகிய நால்வரைப் பெற்று இன்புற்று வாழ்கின்றார். இவர்களின் மகளாகிய தனுஷா மக்கள் வங்கியிலும், உதயணன் லண்டனில் உயர்கல்வியைக் கற்பதுடன், கார்த்திக் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவனாகவும், பிரசன்னா தகவல் தொழில்நுட்ப (B.Sc.) இறுதியாண்டு மாணவனாகவும் கற்று வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இன்புற்று வாழும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் யாவரையும் கண்ணுற்று இன்பமாக இன்னும் சில காலம் வாழ்வதற்கு அன்னார் கொடுத்து வைக்கவில்லைப்போலும். அன்னார் மண்ணில் செய்த சேவை போதுமென்று ஆண்டவனும் தன் திருவடியிற் சேவை செய்து வீடுபேறு எய்துமாறு அணைத்துக் கொண்டாரோ? மக்கள், மண்பொருள், வையகம் அத்தனையும் நீத்து அகன்றார். அகலிடத்தார் ஆசாரத்தை, தன்னை மறந்தாள், தன் நாமம் கெட்டாள், தலைப்பட்டாள் தலைவன் தாளே. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிவிட்ட எம் அன்னைக்கு நாம் அனைவரும் அவரிற்கு வீடுபேறு கிடைக்க வேண்டுமென்று வேண்டி வணங்குவதை விட வேறு என்ன கைமாறு செய்ய முடியும்?

இவ்வுலகத்தில் உத்தமியாய் வாழ்ந்து உலகம் போற்ற அன்பும் அறனும் பண்பும் பயனும் செய்த செயல்கள் இன்று ஓய்ந்து விட்டதோ? இனி எப்போ உம்மைக் காண்போம்? இனி உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று பிரார்த்திப்பதை விட வேறு என் செய்வோம்? நீங்கள் காட்டிய வழியைப் பின்பற்றி ஒற்றுமையாய் வாழ்ந்து, உங்கள் எண்ணத்தை நிறைவு செய்து, உங்கள் ஆத்மா சாந்தியடைய நாம் அனவரும் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமுள்ள எங்கள் அம்மாவே!

உங்கள் அழகு வதனமும், கனிவான பேச்சும், பரிவான பாசமும் எங்கள் காலம் உள்ளவரை மறக்க முடியுமா?

தந்தையை இழந்த நாள் முதல் எங்கள் எல்லோரின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டு நீங்கள் நினைத்தபடி எங்களை வாழ வைத்தீர்கள். வீட்டுக்கு வரும் உற்றார் உறவினர்களை அன்புடன் வரவேற்று, இன்முகத்துடன் பசியாற்றி வழியனுப்பும் பண்பும் உங்களைப் போல் யாருக்கு வரும்? நீங்கள் இல்லாக் காலங்களிலும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் தான் கட்டிய வீட்டில் வந்து, தான் வைத்த கனிமரங்களிற் கனிகளும், தென்னை மரங்களில் இளநீரும் உண்டு மகிழ வேண்டுமென்று காணிமுழுவதும் மரங்களை நாட்டி வைத்திருக்கிறீர்களே! அனைவரும் பார்த்து வியக்கும் வண்ணம் சோலை வனமாக்கி வைத்திருக்கிறீர்களே! எங்கு பார்த்தாலும் எதைப் பார்த்தாலும் உங்கள் திறமைதான். வீட்டில் உள்ள தாவரங்கள் ஒவ்வொன்றும் உங்கள் உணர்வை, உள்ளக் கருத்தைக் கதை கதையாகக் கூறுகின்றனவே. எங்கள் காலம் உள்ளவரை மறக்க முடியுமா?

"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியது
திண்ணிய தாகப் பெறின்"

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய உங்கள் எண்ணப்படியே குடும்பத்தை வழிநடத்தி, எண்ணிய நிலையில் ஒவ்வொரு பிள்ளைகளையும் வாழ வைத்திருக்கிறீர்கள். எங்கள் சிறுவயதில் இருந்து ஒற்றுமையாய் இருக்கவேண்டும் என்று சொல்லிச் சொல்லியே வளர்த்தீர்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒருவருக்கொருவர் துணையாக இருக்கவேண்டும். எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்குள்ளும் ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாது என்று அடிக்கடி கூறுவீர்களே! உங்கள் பிள்ளைகளைப்போல அயல் வீட்டுப் பிள்ளைகளுடனும் அன்பாகப் பேசி; அறிவுரை கூறுவீர்களே. சிறுவயது முதல் கல்வி கற்ற காலங்களில் அன்பு மொழிகளையும், அறிவுரைகளையும், நீதிக் கதைகளையும் கூறி ஆரம்ப ஆசானாக எம் கல்விக்கு வித்திட்டு எம்மை வளர்த்தீர்களே! எங்களுடன் சேர்த்து எத்தனையோ பிள்ளைகளை உங்கள் சொந்தப்பிள்ளைகளாக அறிவுரை கூறி வளர்த்தீர்களே. அத்தனை பேரும் அடுத்த பிறவியிலாவது உங்கள் சொந்தப் பிள்ளைகளாகப் பிறக்க வேண்டுமென்று உங்கள் இறுதிச் சடங்கிற் கதறி அழுதார்கள். எங்கள் காலம் உள்ளவரை மறக்க முடியுமா? வசதி வாய்ப்புக்கள், செல்வங்கள் இருந்துமென்ன? உங்களை எங்களால் மீண்டும் காணமுடியுமா? நீங்கள் செய்த சமயத் தொண்டுகளையும், ஆன்மீகப் பணிகளையும் நாங்கள் குறைவின்றி எதிர்காலத்தில் நிறைவேற்றி வைப்போம். எது செய்யினும் உங்கள் இழப்பை எவராலும் ஈடுசெய்ய முடியாது. இவ்வுலகிற் பிறப்பவர் யாவரும் ஒருநாள் இறப்பது உறுதி. இதுதான் இயற்கையின் நியதியும் கூட. எனவே நமக்கு நாமே ஆறுதல் கூறிக் கொண்டு ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

**மக்கள்**

# மருமக்கள் புலம்பல்

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அன்பின் திருவுருவாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
நேர்மையின் சின்னமாய்
வாழ்க்கையின் வெற்றிப்படியாய்
வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய மாமியே.
இனி யார் வருவார் எம்மை வழிநடத்த .

யார் பிள்ளை எனினும் எம்மை
தன் பிள்ளை போல் பார்த்தவரே
உங்கள் அன்புக்கு நிகர் வேறுண்டோ ?
மாமி என நாம் கூறினாலும்
பிள்ளைகள் போல் எம்மை ஆதரித்த அம்மாவே
இனி யார் உள்ளார் நின் பாசத்திற்கு நிகராய் அன்னையே .
ஊரெல்லாம் திரண்டுவந்து உங்களுக்குச் செலுத்திய
அஞ்சலியே உங்களது புகழைப் பறைசாற்றியது தாயே
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
எம்பெருமானை இறைஞ்சி நிற்கின்றோம் .
தெய்வமாக இருந்து எங்களை வழிநடத்துங்கள் தாயே.

மருமக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

துள்ளி விளையாடி குறுங்கதைகள் கேட்கும்போது
அள்ளி அரவணைத்து ஆர்வமாகக் கதை கூறும் அம்மம்மா
இனிமேல் யார் வருவார் எமக்கு இந்தப் பண்புக்கு நிகராய்ப்
படிப்பினைக் கதைகள் பல கூறி, பரவசப்படுத்திய எங்கள்
அம்மம்மா! உங்கள் அன்புக்கு நிகர் ஏதும் உண்டோ?
நேசித்த காலங்களை யோசித்து வாழ்வோம் அம்மம்மா

குறும்புகள் பல நாம் செய்தாலும் அப்பம்மா
அத்தனையும் விருப்போடு ரசிப்பீர்களே
எங்கள் பெற்றோரையும் அன்புடன் வளர்த்த அப்பம்மாவே
உங்கள் அன்பும், பாசமும் இனி எங்கே? எப்போது கிடைக்கும்
ஊரெல்லாம் உங்கள் புகழ் நிலைத்திருந்தாலும்
மாசற்ற தூய அன்பு எமக்குண்டோ? கூறுங்கள்.
பரிதவிக்க விட்டெம்மைப் பாதிவழி பிரிந்து சென்றது ஏனோ?
அப்பம்மாவே மீதி எம்துணைக்கு யார்வருவவார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பம்மா எங்குற்றீர்?

எம் வாழ்க்கைப் பாதையில் திசைவழி தெரியாது கலங்கும் பருவ காலத்தில் கலங்கரை விளக்கம்போல் எமக்குத் திசைகாட்டி வழிப்படுத்திய அப்பம்மா எங்குற்றீர்? நீங்கள் இறைவனிடம் சென்றாலும் உங்கள் அறிவுரைகளையும், ஆன்மீகப் போதனைகளையும், சமய நெறிகளையும் மறப்போமா?

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்"

என்று வள்ளுவர் கூறியதுபோல, ஒருவர் தீமை செய்தாலும் நீங்கள் தீமை செய்ய எண்ணக் கூடாது. நன்மையே செய்யவேண்டும் எனக் கூறினீர்களே. உங்களைத் தேடி நாம் வரும்போது, தாமரை மலர்போல் மலர்ந்த முகத்தோடு வரவேற்கும் இன்முகத்தை எங்கே காண்பேன்? உங்கள் அன்பான அறிவுரைகள், தத்துவக் கதைகள், சமயப் போதனை கள் எல்லாவற்றையும் எண்ணும்போது என் இதயம் கனக்கிறதே! அப்பம்மா ! பேரப்பிள்ளைகள் யார் எந்நேரம் வந்தாலும் சாப்பிடுங்கோ என்று எங்களைக் கேட்பீர்களே? எங்கள் பிறந்த தினத்தில், புதுவருடத்தில், தீபாவளி தினத்தில் எல்லாம் நீங்கள் தரும் புத்தாடைகள், பரிசுப் பொருட்கள் எங்கே? இனி இவை எல்லாவற்றையும் நாங்கள் யாரிடம் எதிர்பார்ப்பது? எங்கள் எல்லோரையும் ஒற்றுமையாகவும், ஒருவருக்கொருவர் உதவியாகவும் வாழவேண்டும். உறவுகளுக்கிடையே ஏற்படும் கஷ்டங்களுக்கெல்லாம் தோள் கொடுத்து உதவ வேண்டும். ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் "விட்டுக் கொடுத்துப் போங்கடா தம்பி" என்று கூறுவீர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இனியார் அப்பம்மா அறிவுரை சொல்வது? எமது பராய வயதினிலே எமக்குக் கூறிய அந்த வார்த்தைகள் யாவும் எம்மை நல்வழிப்படுத்தியிருக்கிறது. " அம்மா அப்பாவின் நற்பெயரை உன் செய்கைகளினாற் காப்பாற்றிக் கொள்ளடா தம்பி" என்று அடிக்கடி நீங்கள் கூறியது என்மனதிற் பசு மரத்தாணிபோல் பதிந்துள்ளது. எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்த வார்த்தைகளை நினைத்துச் செயலாற்றுவேன். நீங்கள் விட்டுச் சென்ற பாதையில், உங்கள் எண்ணங்களைச் சுமந்தவனாகவும்; சைவ சமயத்தொண்டுகளையும், ஆன்மீகப் பணிகளையும் நிறைவேற்றி வைப்பேன். "வாழ்விற்கு வழிகாட்டி நம் உயர்விற்கு வித்திட்ட என் அப்பம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வீரமா பிடாரி அம்பாளைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

பேரன்
ஜதிசங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்குற்றீர் பாட்டியம்மா

அன்புமிக்க எங்கள் பாட்டியம்மா,
ஆசையாய் எமை ஆதரித்தீர்,
இன்பமாய் நாம் வாழ வேண்டுமென்று
ஈசனை வேண்டும் பாட்டியம்மா
உலகம் போற்றும் உத்தமராய் நாம் வாழ
ஊக்கமாய் என்றும் உபதேசம் செய்திடுவீர்
என்றும் எங்களோடு இனிது வாழ்ந்தீர்
ஏன் எமை விட்டு இறைவனிடம் சென்றீர்?
ஐயமில்லை ! என்றும் இறைவனடியில் நீர்
ஒளிவீசி சேவை செய்து உயர்ந்திடுவீர்
ஓங்காரப் பிரணவத்தில் இரண்டறக்கலந்து
ஔவைப் பாட்டி போல் உயர்ந்து விட்டீரே.

"துதிப்போம் என்றும் சாந்தி பெறவே'

பூட்டப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாட்டி

காலையும் புலருது, வீட்டுச் சேவலும் கூவுது,
குயிலும் பாடுது, காக்கையும் கரையுது
மாட்டுக் கன்றும் தேடுது, "சீசர்" நாயும்அழுகுது
வைரவர் கோவில் மணியும் அடிக்குது
பிள்ளையார் கோவில் பூசையும் நடக்குது - எங்கே
பாட்டியம்மா போனீங்க?
எங்கள் முத்தான பாட்டியம்மா எங்கே?
கட்டியணைத்து முத்தம் தந்து
வேஷம் இல்லா பாசம் தந்து
நாள் பார்த்து நேரம் பார்த்து - மயில்
காசு தந்து, உச்சி மோந்து
பாசத்திற்கோர் முகவரி தந்து - எம்
முக அழகிற்கோர் வதனம் சேர்த்து
காது பிடித்து, மூக்குப் பிடித்து - எமக்கோர்
அழகு பார்த்து - காலுக்கு
எண்ணெய் பூசி, பிடித்து - தள்ளாத
வயதிலும் தாலாட்டி, சீராட்டி - பாராட்டி
உணவூட்டி, உணர்வூட்டிய எம் - பாட்டியே
காலைப்பொழுதில் பலரும் கதறும் - சத்தம் கேட்டு
கண்விழித்து
உனை நாம் தேடினோம், தேடுகின்றோம்
பாட்டியம்மா நீ எங்கே?
ராகவிக்கு மூக்கு, கால் பிடிக்க வேணும்
நீ பிடியாமல் - எமக்கு யார் பிடிக்கவுண்டு?
தோடை காயுது, தேசி காயுது,
செவ்விளையும் காயுது - நீ வருவாய் என!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே எம் பாட்டியம்மா என்பதற்கு - பலகதை
பலரும் சொல்லுகிறார்கள் - நீ போய்
விட்டதாகக் கூறினார்கள் - இந்தியாவிற்கு
என்கிறார்கள், இயேசப்பாவிடம் என்கிறார்கள்
தம்பிக்கு 'கிரேன்' வாங்கப் போய்விட்டார்கள்
என்கிறார்கள்
ஒன்றும் வேண்டாம் பாட்டி
நீங்க வாங்கோ பாட்டி
நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறம் பாட்டி.

தம்பி ரூபிதன்,
தங்கச்சி ராகவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பராசக்தி இராஜரட்ணம் நினைவுடன்...

பிறப்பினைப்போல் இறப்பும் இயல்பானது. எனினும் முன்னையது மகிழ்வினைத் தருகின்றது. பின்னையது துன்பத்தினைத் தருகின்றது. பிறப்பின்போது குழந்தை அழ ஏனையோர் சிரிக்கின்றனர். இறப்பில் ஏனையோர் அழுகின்றனர். இறந்தவர் ஆறுதல் அடைகிறார். பிறப்பின் பின்னர் வாழ்க்கையோட்டமே வரலாறாகிறது. இந்த நீண்ட ஓட்டத்தில் உறவுகளும், உறவாடல்களும், சாதனைகளும், சமூக உறவுகளும் முகிழ்ந்தெழுகின்றன. இவற்றினை யொட்டியே அவனது சமூக நிலை, நிலைபெறுகின்றது. மதிப்பிடப்படுகின்றது. இம்மதிப்பீட்டுத் தாக்கமே நிலை பெற்றிருந்த மனிதனொருவனது வாழ்வு மரணத்தால் நிலைகுலைகின்றபோது பெருந்துயராகின்றது. துயர்: பகிர்வின் பரப்பாண்மை, சமூகத் தொடர்புகளின் அடிப்படையில் பரிணாமமடைகிறது.

நல்லதொரு குடும்பத் தலைவியாய், சமூக நெருக்கப்பாடு கொண்டவராய், சமயியாய், நீண்டகாலம் வாழ்ந்து அமரத்துவம் அடைந்த பராசக்தி இராஜரட்ணம் நெஞ்சை நிறைத்தவர். அமரரது இழப்பால் இழப்புற்ற அனைவரிற்கும் ஆறுதல் பெற இறைவனை வேண்டி அன்னாரின் ஆன்மா சாந்தியடைய ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாளின் பாதார விந்தங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

பிரம்மஸ்ரீ ர. கேசவ சர்மா (தாவடி)
ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள்
தேவஸ்தான குரு,
ஆனைக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்

மரணம் என்பது இயற்கையானதுதான். இருந்தாலும், சில மனிதர்களுடைய மரணத்தை எம்மால் ஏற்றுக்கொள்ளவும், மனதால் தாங்கிக்கொள்ளவும் முடிவதில்லை. அவர்களது பிரிவானது என்றென்றைக்கும் எம்மை வருந்துவதாக அமைந்துவிடுகின்றது. அவர்களுடைய எண்ணம், செயல், நடத்தை யாவும் நெஞ்சில் நிலைபெற்று, எப்போதும் இனம்புரியாத ஏக்கத்தைத் தந்து கொண்டேயிருக்கும். சிலரது இறப்பு அவர்களுடன், குடும்பத்தவர்களுடன் மட்டுப்படுத் தப்பட்டது. இன்னுஞ் சிலரது இறப்பு, இறந்தவரது குடும்பத்தவர் உட்பட, பழகிய அனைவருக்கும் தாங்க வெண்ணாச் சோகத்தினைத் தந்துவிடுகிறது. இத்தகைய மீளாத்துயருக்கு எம்மை அளாக்கிய குணநலன்களும், ஆகர்சிப்பும் கொண்டவர்தான் பராசக்தி அம்மா அவர்கள்.

காலம் நமக்குத் தந்த இனிமையான கனியைப் போன்றவர் தான் பராசக்தியம்மா. பழகுவோர் அனைவரையும் முதற்சந்திப்பிலேயே ஈர்த்துவிடும் வசீகர சக்தி படைத்த வராகவும் அன்பு, அடக்கம், நேர்மை, அமைதி, சகிப்புத் தன்மை, செயற்றிறன் ஆகிய சால்புகள் அமையப் பெற்ற வராகவும் அவர் விளங்கினார். மற்றவர்களிற்கு ஓடியோடி உதவுவதில் காட்டும் அக்கறை அவரையொரு சமூகப் பணியாளராக இனம்காட்டும். ஆடம்பரம் கொஞ்சமேனும் கிடையாது. எளிமையும், அடக்கமும் அவரது தூயபண்பு களாகும்.

எப்போதுமே தெய்வ தரிசனமும், இறை சிந்தனையும் மிக்கவராக விளங்கினார். எப்போதும் அவரது பெயரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராசக்தியின் முழுமைத் தோற்றமாகக் காட்சியளிப்பவர். நாலுகால்மட வைரவர் மீது அபாரபக்தி கொண்டவர். இப்படியான சற்குண சீலங்களைக் கொண்டு விளங்கியவர். எம்மைவிட்டுக் காணமுடியாத உலகம் சென்றாலும் எம் உள்ளத்தை விட்டு என்றும் அகலாதவர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுவர்"

**லயன் N.T.S. சுபநாதன்**
இயக்குநர்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்கண்ட பராசக்தி கண்காணா பராசக்தியின் காலடியில் சங்கமம்

எமது பொருளாளர் திரு. இராஜரட்ணம் தயாநிதியின் தாயார் திருமதி பராசக்தி இராஜரட்ணம் இறைபதமடைந்த இச்சந்தர்ப்பத்தில் மனித வாழ்வின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு அதன்வழி செல்ல நாம் முயற்சிக்க வேண்டும். மரணங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. அது ஒருபோதும் நிற்கப்போவதில்லை. அந்த வகையில் இந்த உலக வாழ்க்கை நிலையற்றது.

முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவது கண்டு பின்னும் இந்த
மிடிசார்ந்த வாழ்வை நினைப்பதெல்லாம் பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து தாமுய்ய வேண்டுமென்றே அறிவாரிலையே.

இந்த உலக வாழ்க்கை இன்பமாகத் தெரியும்வரை உலக மாயையில் இருந்து நாம் விடுபடப் போவதில்லை. வாழும் காலத்திலேயே இறைபக்தியை வளர்த்து, எமது வாழ்வை எமக்காக மட்டுமன்றி ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காணும் வகையில் வாழ்வதே மனித வாழ்வில் சிறந்தது. சீரழிந்து தறிகெட்டு ஓடும் இந்தச் சமூக ஓட்டம் இறுதியில் அழிவுக்கானதே. அதை உணர்ந்து பெருவாழ்வு வாழ்வதற்கு ஏற்ற வழிவகைகளை வாழும் காலத்திலேயே நாம் கைக்கொள்ள வேண்டும். அன்னை பிடாரி அம்பாள் சக்தியின் ஒரு வடிவமாகும். பிடாரி அம்பாள் நிலைபெற்று நிற்கும் இந்த ஊரில் நீண்டகாலம் வாழ்ந்தவர் அமரர் பராசக்தி இராஜரட்ணம். அவர் அறநெறியோடு வாழ்ந்தவர். இறைபக்தி கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடாரி அம்பாளின் பாதக்கமலங்களை நாடிவிட்டார். ஒவ்வொரு மனிதனும் இச்சந்தர்ப்பத்திலேயே உலக வாழ்வின் நிலையாமையை உணருகிறான். அடுத்த கணமே மறந்தும் விடுகிறான். சைவ சமயம் காட்டும் உண்மையை நாடி நாம் வாழ வேண்டும்.

ஓம் சாந்தி

பரிபாலன சபை,
வீரமா பிடாரி அம்பாள் ஆலயம்,
வண்.வடமேற்கு,
ஆனைக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆயிரம் பிறைகண்ட அன்னை"

"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது" ஔவையின் இந்த வாக்கு மனித குலத்தின் மேன்மையைக் காட்டும். அமரர் பராசக்தி இராஜரட்ணம் ஆயிரம் பிறைகண்டவர். மனித வாழ்வில் ஆயிரம் பிறை கண்ட வாழ்வைப் பெறுவது மிக அரிதானதே. அந்த வாழ்வைப் பெற்ற அவர் தன் குடும்பத்தின் வளமான வாழ்வுக்கு ஒளி விளக்காகத் திகழ்ந்தார். அவரின் அந்த அர்ப்பணிப்புச் சேவை இன்றுள்ள தாய்மார்களுக்கு ஒரு முன்மாதிரியும் எடுத்துக்காட்டுமாகும். தன்னை உருக்கித் தன்னைச் சார்ந்தவர்களுக்கு ஒளிவிளக்காக அமைவது மிகச் சிறந்த ஒரு மனித சேவை. இன்று கட்டுக் குலைந்து, குடும்ப வாழ்வு சிதறித் தத்தளிக்கும் குடும்பங்களுக்கு அவர் ஒரு கலங்கரை விளக்காகும். இந்தச் சமூகம் சார்ந்த சேவை, அவர் இல்லாத இந்த நாளில் நினைவு கூறத்தக்கது. நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்ழகம் என இன்று பெரியவர்கள் கூறுகிறார்கள். அந்த வகையில் அவர் அதன் உபவேந்தராகப் பரிண மித்துள்ளார்.

"வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" சைவச் சான்றோரின் கருத்து இதுவாகும். இயற்கையின் விதிக்கு எவரும் விதிவிலக்கல்ல. இறைபக்தி கொண்ட அவர் சிவபதமடைந்துவிட்ட நிலையில், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சி நிற்போம்.

ஓம் சாந்தி

அ. குமாரவேலு
விரிவுரையாளர்,
பட்டப்படிப்புகள் பிரிவு ,
யாழ்ப்பாணக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பராசக்தியின் ஆற்றலை ஊர்மக்களாகிய நாம் சற்றுச் சிந்தித்துப் பார்ப்போம்...

சிவபூமி எனத் திருமூலராற் போற்றப்பட்ட ஈழத் திருநாட்டில் கந்தபுராணக் கலாச்சாரமே யாழ்ப்பாணக் கலாச்சாரமாகத் திகழ்கிறது. சைவமும் தமிழும் ஓங்கி ஒளி பெற ஆறுமுநாவலர் அவர்கள் அரும்பாடுபட்டார். அதன் காரணமாக; சைவமும் தமிழும் நிலைபெற்றிருக்கிறது.

அந்த வகையில் நாலுகால்மடம், வண்.வடமேற்கு, ஆனைக்கோட்டை எனும் பதியில் சைவகலாச்சாரம் விளங்கும் பகுதியாகத் திகழ்ந்து வருகிறது. இப்பகுதியில் வாழ்ந்த அமரர் பராசக்தி அவர்களின் மூதாதையினர் அப்பகுதியில் நாலுகால் மடம், சுமைதாங்கி, கிணறு, நீர்த்தொட்டி, ஆவுரோஞ்சு தறியும் அமைத்தும், வழிப் போக்கர்களுக்கும், பசுக்களிற்கும் ஆறுதல் அளிக்க மருத மருத்தை நாட்டியதோடு காவல் தெய்வமாம் வைரவப் பெருமானுக்குக் கோவில் அமைத்து வழிபட்டு வந்தனர்.

அந்த மரபில் வந்தவர்தான் அமரர் பராசக்தி மூதாதையர் வழியைப் பின்பற்றி, கோயில் திருப்பணிகளிலும், திருவிழாக்களிலும் பங்குபற்றி வந்துள்ளார். இவர் சந்ததியி னருக்குரிய கோயில், மடம், கிணறு என்பன அமைந்துள்ள நிலப்பகுதியை மரபுவழி அல்லாதோர் அபகரிக்க வந்தபோதும் தன் மரபு வழியில் உள்ள உறவினர்கள் பாராமுகமாக இருந்தபோதும் அமரர் பராசக்தி அவர்கள் தனித்து நின்று, தன் சொந்தப்பணம் பலலட்சம் ரூபாவைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவு செய்து 1962ஆம் ஆண்டுமுதல் நீதிமன்றம் சென்று வாதாடி 1993ஆம் ஆண்டு அப்பீல் கோட்டில் இவ் வாதனத்தைத் தனது உரிமையாக்கிக் கொண்டார். அதன்பின் வைரவர் ஆலயச் சூழலில் அமைந்துள்ள இரு அறைகளுடன் கூடிய நிலப்பரப்பை வைரவர் கோவிலுக்காகப் பயன்படுத்துமாறு தன் மரபுவழிவந்த கோவில் நிர்வாகத் தினரிடம் ஒப்படைத்தார்.

இவ்வாறு பல இடர்களுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில், தங்கள் மரபினருக்கு உரிய உரிமையைப் பெற்று அதில் சைவநெறியை நிலைநாட்ட வேண்டுமென்ற மனப்பக்குவம் கொண்ட கொடை வள்ளலாகிய அவர் என்றும் போற்றுதற்கு உரியவரே,

இது மட்டுமல்லாது, கோயில் மருதமர நிழலிலே வருடா வருடம் நல்லூர் தேர், தீர்த்தத் திருவிழாக் காலங்களிலே தண்ணீர்ப் பந்தல் அமைத்து, கோவிலுக்குச் சென்று வரும் அடியார்களுக்குத் தாகசாந்தி செய்து ஈந்துவக்கும் உள்ளம் கொண்டவராக விளங்கினார். தான் இல்லாக் காலங்களிலும் இத்திருப்பணியை மக்கள், பேரப்பிள்ளைகள் தொடர்ந்து செய்துவர வேண்டுமென்று கூறிவைத்துள்ளார்.

இப்படி தர்மசிந்தையும், சைவசமயப் பற்றுமுள்ள உத்தமரை, ஈகையாளரை இழந்து நாலுகால்மடச் சுற்றாடல் மக்கள் ஆகிய நாம் ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ளோம். எனினும் சித்திரைமாத பூர்வபக்ஷ ஏகாதசித் தினமாகிய 13.05.2011 இல் இறைவன் திருவடியை அடைந்த அமரரின் ஆன்மா சிவப்பேறுபெற்று சாந்தியடைய ஊர்மக்களாகிய நாம் அனைவரும் எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையார் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம் பிறை போலும் மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தங்கை.

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பு மிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றாம் தா.

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித ஸூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம்

| | | |
|---|---|---|
| ப்ரஹ்மமுராரி | ஸுரார்சித | லிங்கம் |
| நிர்மலபாஸுத | ஸோபித | லிங்கம் |
| ஜந்மஜதுக்க | விநாசக | லிங்கம் |
| தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| | | |
| தேவமுநிப்ரவ | ரார்ச்சித | லிங்கம் |
| காமதஹம் | கருணாகர | லிங்கம் |
| ராவணதர்ப்ப | விநாசந | லிங்கம் |
| தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| | | |
| ஸர்வஸுகந்தி | ஸுலேபித | லிங்கம் |
| புத்திவிவர்த்தன | காரண | லிங்கம் |
| ஹித்தஸீராஸிர | வந்தித | லிங்கம் |
| தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| | | |
| கநகமஹாமணி | பூஷித | லிங்கம் |
| பணிபதிவேஷ்டித | ஸோபித | லிங்கம் |
| தக்ஷஸுயக்ஞ | விநாசன | லிங்கம் |
| தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| | | |
| குங்கும சந்தன | லேபித | லிங்கம் |
| பங்கஜஹாரஸு | ஸோபித | லிங்கம் |
| ஸஞ்சிதபாப | விநாசன | லிங்கம் |
| தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| | | |
| தேவகணார்ச்சித | ஸேவித | லிங்கம் |
| பாவைர்பக்திபிர் | ஏவச | லிங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திநகர கோடி | ப்ரபாகர | லிங்கம் |
| ததப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| | | |
| அஷ்டதளோபரி | வேஷ்டித | லிங்கம் |
| ஸர்வ | ஸமுத்பவ காரண | லிங்கம் |
| அஷ்டதரித்ர | விநாசக | லிங்கம் |
| தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |
| | | |
| ஸுரகுருஸுரவர | பூஜித | லிங்கம் |
| ஸுரவநபுஷ்ப | ஸ்தார்சித | லிங்கம் |
| பராத்பரம் | பரமாத்மக | லிங்கம் |
| தத்ப்ரணமாமி | ஸதாசிவ | லிங்கம் |

-ஸ்ரீமத் சங்கர பகவத் பாத சுவாமிகள்

"லிங்காஷ்டம் இதம் ஸ்தோத்திரம்
யஃபடேத் சிவசந்நிதௌ
சிவலோக மவாப் நோதி
சிவனே ஸஹ மோததே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் பராசக்தி

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் பராசக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்.

செல்வத் திருமகளைத் திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வமெல்லாம் தருவாள் நமதொளி
திக்கனைத்தும் பரவும்.

(ஓம்சக்தி)

தாமரைப் பூவினிலே சுருதியைத்
தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே கண்ணிலொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம்.

(ஓம்சக்தி)

**சுத்த சக்தி**

சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம் சிவம்
சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம் சிவம்
சத்திய ஞான தர்ம சக்தி சாந்த சக்தி ஓம் சிவம்
சச்சிதானந் தாத்ம சக்தி சர்வ சக்தி ஓம் சிவம்

(சுத்த)

வேத சாஸ்த்ர சகலகலா வித்யா சக்தி ஓம் சிவம்
ஓம் வீர தீர தைர்ய சக்தி விஜய சக்தி ஓம் சிவம்

(சுத்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாத கீத கானகலா நடனசக்தி ஓம் சிவம்
மஹா மந்திர யந்தர தந்தர வச்ய சக்தி ஓம் சிவம்
(சுத்த)

யோக போக த்யாக சக்தி லோக சக்தி ஓம் சிவம்
தாகமோஹ சோக ரஹித தபோ சக்தி ஓம் சிவம்
(சுத்த)

துஷ்ட சத்துரு நாக சக்தி துர்க்கா சக்தி ஓம்சிவம்
அஷ்ட லக்ஷ்மி ஞான வாணி அமரசக்தி ஓம் சிவம்
(சுத்த)

குஞ்சித பாத அபயஹஸ்த வாஞ்சித பல தாயகம்
குருபர சிவ ஹரஹர நடராஜ சுத்த சக்தி ஓம்சிவம்
(சுத்த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கால துர்க்கா அஷ்டகம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்குமானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே.
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உலகை யீன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் என்தன் நிதியும் துர்க்கையே.
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

செம்மையானவள் துர்க்கா ஜயமுமானவள்
அம்மையானவள் அன்புத் தந்தையானவள்
இம்மையானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே.
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடைமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே.
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமற்றவள் துர்க்கா தூரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணியானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தாங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே.
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திரிசூலியானவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே.
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கைதேய ஜெய தேவி துர்க்கையே.

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே.
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.

கன்னி துர்க்கையே இதய கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே.
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி அஷ்டகம்

பகவதி தேவி பார்வத தேவி
பலமிகு தேவி துர்க்கையளே
ஜெகமது யாவும் ஜெய ஜெய வெனவே
சங்கரி யுன்னைப் பாடிடுமே
நறைநறை தகதக பசபச வெனவே
தனித்திடு ஜோதி யானவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா!

தண்டினி தேவி தக்ஷிணி தேவி
கட்சினி தேவி துர்க்கையளே
தந்தன தான தன தன தான
தாண்டவ நடன ஈஸ்வரியே
முண்டினி தேவி முனையொளி சூழி
முனிவர்கள் தேவி மணித்தீவி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா !

காளினி நீயே காமினி நீயே
கார்த்திகை நீயே துர்க்கையளே
நீலினி நீயே நீதினி நீயே
நீர் நிதி நீயே நீர் ஒளியே
மாலினி நீயே மாதினி நீயே
மாதவி நீயே மான் விழியே
ரோகநிவாரணி சோகநி வாரணி
தாபநிவாரணி ஜெயதுர்க்கா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரணி மாயே நான்முகன் தாயே
நாகினி யாயே துர்க்கையளே
ஊரணி மாயே ஊற்று தாயே
ஊர்த்துவ யாயே ஊர் ஒளியே
காரணி மாயே காருணி தாயே
கானக யாயே காசினியே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா !

திருமக ளானாய் தலைம களானாய்
மலைமக ளானாய் துர்க்கையளே
பெருநிதி யானாய் பேரறி வானாய்
பெருவலி யானாய் பெண்மையளே
நறுமல ரானாய் நல்லவ ளானாய்
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா !

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவுறை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரணையே
பூத நற் ஜோதி பூரண ஜோதி
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா.

ஜெயஜெய சைல புத்திரி ப்ரஹ்ம
சாரணி சந்த்ர கண்டினியே
ஜெய ஜெய கூஷ்மாண் டினி ஸ்கந்த
மாதினி காத்ய யன்னையளே
ஜெயஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெயதுர்க்கா !

**பலன்வழி:**

செவ்வாய் - வியாழன், அஷ்டமி ஆகிய தினங்களில் காலையிற் படிக்க நற்பலன் விளையும். நோய்கள் தீர அன்றாடம் ஐந்து தடவையும், குடும்பத் துன்பங்கள் தீரக் காலையிலும் மாலையிலும் எண்பத்தொரு நாட்களும் தொடர்ந்து படித்துவர அன்னை அருள் கூடும். கோவில்களில் விளங்கும் ஸ்ரீ துர்க்கா சந்நிதியில் ராகு காலத்திற் பாடிவரின் கிரக பீடையும், துன்பமும் தீரும். செவ்வாய்க்கிழமை தீபத்தின் முன்பு ஆசாரசீலராயிருந்து படிக்கும் கன்னிகைகளுக்கு விவாகப் பிராப்தியும் ஏற்படும்.

- ஜெயதுர்க்கா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாடு

**சூரியன்**

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்.

**சந்திரன்**

எங்கள் குறைக ளெல்லாந் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சற்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி.

**செவ்வாய்**

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு.

**புதன்**

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடி போற்றி
பதந்தந் தருள்வாய் பண்ணொலி யானே
உதவியே யருளும் உத்தமா போற்றி.

**வியாழன்**

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரகஸ்பதி வியாழப் பாகுரு நேசா
க்ரக தோஷமின்றிக் கடாஷித் தருள்வாய்.

### வெள்ளி

சுக்ர மூர்த்தி சுபமிக யீவாய்
வக்ர மின்றி வரமிகத் தருவாய்
வெள்ளி சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே.

### சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்கலம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சர வின்றிச் சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா.

### இராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி.

### கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்கு களின்றி
கேதுத் தேவே க்ஷேமமாய் ரக்ஷி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குன்றிலாடும் குமரன்

வேலவனே வேலவனே வேல்முருகா
வெற்றிவடி வேலனே பாலகனே வேல்முருகா
வேலைக்கையில் ஏந்தியாடும் வேலவனே வேல்முருகா
வினைகளெல்லாம் போக்கிடும் வேலவனே வேல்முருகா
பச்சைமயில் வாகனனே பாலகனே வேல்முருகா
அச்சந்தீர்த்து எமையாளும் ஆண்டவனே வேல்முருகா
கண்ணிரண்டும் உன்வடிவே காணவேண்டும் வேல்முருகா.

குன்றிலாடும் குமரனுக்குக் கோடி கோடி கும்பிடு
குழந்தை வடிவேலனுக்கு கோடி கோடி கும்பிடு
கந்தசாமிக் கடவுளுக்குக் கோடி கோடி கும்பிடு
கருணைவடி வேலனுக்குக் கோடி கோடி கும்பிடு
அம்பிகையின் பாலனுக்குக் கோடி கோடி கோடி கும்பிடு
ஆறுமுக வேலனுக்குக் கோடி கோடி கும்பிடு
கந்தசாமிக் கடவுளுக்குக் கோடி கோடி கும்பிடு
கருணைவடி வேலனுக்குக் கோடி கோடி கும்பிடு
அம்பிகையின் பாலனுக்குக் கோடி கோடி கும்பிடு
ஆறுமுக வேலனுக்குக் கோடி கோடி கும்பிடு
வள்ளி மணாளனுக்குக் கோடி கோடி கும்பிடு
வடிவேல் முருகனுக்குக் கோடி கோடி கும்பிடு
சரவணத்து ஐயனுக்குக் கோடி கோடி கும்பிடு
சண்முக வேலனுக்குக் கோடி கோடி கும்பிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரநுபூதி

**காப்பு**

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ் சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

**நூல்**

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே.

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனு நீ யலையோ
எல்லாமற என்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்

## செந்தில்மேவும் சரவணன்

### இரண்டாவது கவசம்



திருச்சிற்றம்பலம்

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர்அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டிற் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறெண
வசர ஹணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளு மிளையோன் கையிற்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பிற்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கிற் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனிற் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியாற் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓது மஞ்சனமும் ஒரு வழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடைவாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறைக் கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவ நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையிற் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள்ள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கள் அறிந்து கொள்ள வேண்டியவை சில...

## அறிவுக்கு விருந்து

### கடவுள்

உயிர் இருப்பதால் தான் உடம்பு அசைகிறது என்று உணர்வது போல, கடவுள் இருப்பதால் தான் உலகம் இயங்குகின்றது என்று நம்புதல் வேண்டும். கடவுளைக் காட்டு என்று கேட்பது உடம்பினுள் உள்ள உயிரைக் காட்டு என்று கேட்பதற்குச் சமமானது.

(வாரியார்)

**கற்பூரம் எரிப்பதன் காரணம்**

கற்பூரம் நெருப்பில் எரிந்து சாம்பலோ, கரியோ இன்றி மறைந்து விடுகிறது. அதுபோல் ஆன்மா இறைவனுடைய அருட்ஜோதியில் கலந்து ஒன்றுபட வேண்டும் என்பதையே குறிக்கின்றது.

### பூசையின் பயன்

**பூசையின் போது செய்யப்படும்**

| | | |
|---|---|---|
| அபிஷேகத்தால் | - | பாவம் அகலும் |
| கந்தம் | - | சகல சௌபாக்கியங்களையும் தரும் |
| புஷ்பம் | - | சௌக்கியம் தரும் |
| தூபம் | - | நல்ல வாசனையைத் தரும் |
| தீபம் | - | தேக காந்தியைத் தரும் |
| நைவேத்தியம் | - | மஹா போகத்தைத் தரும் |
| தாம்பூலம் | - | லக்ஷ்மி கடாட்சத்தைத் தரும் |
| நமஸ்காரம் | - | நான்கு புருடார்த்தங்களைத் தரும். |
| ஜெபம் | - | அஷ்ட ஐஸ்வர்யம் அளிக்கும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோமம் - ஸர்வ காமஸ்மிருதியைத் தரும்

அன்னதானம் - சர்வதேவ திருப்தியை அளிக்கும்.

**காலை நேர ஆராதனை**

மார்கழி மாதத்தில் மூன்று மணியளவில் கடவுளைத் தொழும் வழக்கம் உள்ளது. இந்த மாதத்தில் ஆசியாவில் ஜப்பான், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் அடர்த்தியுள்ள பிராணவாயு நிறைந்த குளிர்காற்று வீசும். இது உடலிற் பட்டு ஆரோக்கியம் பெறவே இந்து மதம் காலை நேர ஆராதனையை வகுத்தது.

**ஆலயத்தில் நமஸ்கரிக்கும் முறை**

பொதுவாக ஆலயங்களில் கொடிமரம், பலிபீடம் ஆகியவற்றின் அருகில் மட்டுமே சுவாமியை விழ்ந்து வணங்க வேண்டும். மற்றைய இடங்களில் வீழ்ந்து வணங்கக் கூடாது.

கோயில் கிழக்கு நோக்கி அமைந்திருக்குமானால் வடக்கு நோக்கியும், மேற்கு நோக்கி அமைந்திருக்குமாயின் வடக்கு நோக்கியும் வீழ்ந்து வணங்க வேண்டும். வடக்கு நோக்கியும், தெற்கு நோக்கியும் அமைந்த கோயிலாயின் கிழக்கு முகமாக விழுந்து வணங்க வேண்டும். நமது கால்களை நீட்டும் பகுதிகளில் சுவாமி சந்நிதிகள் எதுவும் இருக்கக் கூடாது என்பது முக்கியம்.

**பிள்ளையார் பிடிக்க...**

'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய்' முடிந்தது என்று ஒரு பழமொழி உண்டு. இந்தப் பழமொழியின் உண்மையான பொருள் என்ன? எந்தச் சுப காரியத்தை ஆரம்பித்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் நாம் பிள்ளையார் பூசையுடன் ஆரம்பிக்க வேண்டும் என்றும்; இறுதியில் அனுமார் பூசையுடன் முடிக்க வேண்டும் என்றும் பெரியோர் விளக்கம் தந்துள்ளனர்.

நாம் செய்யும் செயல் பிள்ளையார் பூசையில் ஆரம்பித்து அனுமார் பூசையில் முடிவதாக இருக்க வேண்டும். அவ்விதம் முடிந்த கதைதான் மகாபாரதம். மகாபாரதக் கதை எப்படித் தொடங்குகிறது? பிள்ளையாருடன் தான் தொடங்குகின்றது. வியாசரின் மனதிற்குள் மகாபாரதச் சுலோகங்கள் தயாராக இருந்தன. இதை எழுதுவதற்கு யாரை அணுகுவது என்று அவர் யோசித்தார். பிள்ளையாரை அணுகினார்.

"நான் சொல்லும் வேகத்திற்கு உங்களால் எழுத முடியுமா?" என்று விநாயகரைக் கேட்டார் வியாசர். "நான் எழுதும் வேகத்திற்கு உங்களால் சொல்ல முடியுமா?" என்று விநாயகர் பதிலுக்கு கேட்டார். இப்படி இவர்கள் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு நமக்கு வழங்கியதுதான் மகாபாரதம். போர் முடிந்ததும் என்ன நடைபெறுகிறது? முதலில் அர்ச்சுனனைத் தேரிலிருந்து இறங்கும்படி கூறினார் ஸ்ரீ கிருஷ்ணர். அர்ச்சுனன் இறங்கினார். அவர் இறங்கியவுடன் அந்த ரதத்தின் கொடியிலே இருந்த அனுமார் மறைந்து விட்டார். உடனே ரதம் தீப்பிடித்து எரிந்தது. எனவேதான் மகாபாரதம் பிள்ளையாருடன் ஆரம்பித்து அனுமாருடன் முடிகிறது.

**முருகனும் தமிழும்**

தனிப் பெரும் தெய்வமாக முருகனை வழிபடுவதற்குக் காரணம் உண்டு. முருகப் பெருமானுக்கு முகங்கள் ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழுக்கு வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடையினம் ஆறு.

முருகனுக்குத் தோள்கள் பன்னிரண்டு (6x2)
உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு.
முருகனுக்கு கண்கள் பதினெட்டு (6x3)
மெய் எழுத்துக்கள் பதினெட்டு.

முருகன் திருக்கரத்தில் உள்ள வேல் எந்தத் தெய்வத்திற்கும் இல்லாத ஆயுதம். அது போல தமிழிலில் உள்ள ஆய்த எழுத்து எந்த உலகமொழியிலும் இல்லை. இச்சை, கிரியை, ஞானம் என்ற மூன்று தன்மைகளும் பொருந்தியது வேலாயுதம். ஆய்த எழுத்தும் இவற்றைக் குறிக்கும் வகையில் மூன்று புள்ளிகளைக் (ஃ) கொண்டது.

**பூசைக்கு உகந்தமலர்**

| | | |
|---|---|---|
| விநாயகருக்கு | - | எருக்கலம்பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, அறுகு. |
| முருகனுக்கு | - | முல்லை, சாமந்தி, ரோஜா, காந்தள் |
| அம்மனுக்கு | - | வெண்தாமரை, மல்லிகை, முல்லை, கடம்பு, சூரிய காந்தி, செம்பருத்தி, செம்பவள மல்லிகை |
| சிவனுக்கு | - | தும்பை, வில்வம், சங்குப்பூ, செம்பருத்தி. |
| திருமாலுக்கு | - | தாமரை, பவளமல்லி, மருக் கொழுந்து, துளசி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மானசீக மலர்கள்**

பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிவலிங்கத்தை வாசம் நிறைந்த மலர்களைக் கொண்டு பூசிப்பதைப்போல, இதயத்தில் உள்ள சிவலிங்கத்தைப் பூசிக்க எட்டு விதமான மலர்கள் சொல்லப்பட்டுள்ளன.

**அவையாவன:**

- முக்கரணங்களாலும் இம்சை செய்யாமை ஆகிய அகிம்சை. அதுவே முதல் மலர்.
- பஞ்சேந்திரியங்களை அடக்கும் இந்திரிய ஜெயம்- அதுவே இரண்டாவது மலர்.
- எதற்கும் கலங்காமையாகிய தைரியம் - இது மூன்றாவது மலர்
- பிறர் தீமையைப் பொறுமையோடு சகித்துக் கொள்ளலாகிய பொறுமை - இது நான்காவது மலர்
- மனம், வாக்கு, காயம் என்பவை என்றும் சுத்தமாக இருத்தலாகிய சௌசம் எனப்படும் சக்தி - இது ஐந்தாவது மலர்.
- கோபத்தை அறவே ஒழித்த விடலாகிய அத்ரோஹம் - இது ஆறாவது மலர்
- அதர்ம காரியத்தில் மனம் ஈடுபடாமல் அதை வெறுத்தலே ஹரீ - இது ஏழாவது மலர்.
- பேச்சிலும், செயலிலும் சத்தியத்தையே கடைப் பிடித்தலாகிய சத்தியம் - இது எட்டாவது மலர்.

இவ்வாறாக இதயத்தில் உள்ள லிங்கத்தைப் பூசிக்க எட்டுவித மானசீக மலர்கள் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பின்பற்றி ஈடேறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒளிதரும் பல்வகை விளக்கு**

| | | |
|---|---|---|
| நிலத்தில் நிலையாக நிற்கும் விளக்கு | - | குத்துவிளக்கு |
| கைகளில் தூக்கிச் செல்லும் விளக்கு | - | கைவிளக்கு |
| தொங்க விடப்பட்டுள்ள விளக்கு | - | தூக்கு விளக்கு |
| எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் விளக்கு | - | தூண்டாமணி விளக்கு |
| கோயில்களில் பெண்ணுருவில் கைகளில் அகல் ஏந்தி நிற்கும் விளக்கு | - | பாவை விளக்கு |

**செல்வம் நிலைத்திருக்க**

மங்கலகரமான காரியங்களைச் செய்தால் செல்வம் உண்டாகும். சாமர்த்தியத்தால் அது வளர்ச்சியடையும். சுறுசுறுப்பாகக் காரியங்களைக் கவனித்து வருவதால் அது நிலைபெற ஆரம்பிக்கும். அடக்க ஒடுக்கத்துடன் இருப்பதால் அது நன்றாக வேரூன்றிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாங்க உறுப்புக்கள்

(பஞ்ச + அங்கம்)

| | |
|---|---|
| வாரம் | 07 |
| நட்சத்திரங்கள் | 27 |
| யோகம் | 27 |
| கரணம் | 11 |
| திதி | 30 |

**வாரம்:** ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

**நட்சத்திரம்:** அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி.

**யோகம்:** விகம்பம், பிர்தி, ஆயுஸ்மான், சௌபாக்கியம், சோபனம், அதிக்ண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகதம், ஹர்ஷணம், வஜ்ரம், சித்தி, வியதீபாதம், வரியான், பரிகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்ரம், பிராம்யம், மாவேந்திரம், வைதிருதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திதி:** பிரதமை முதல் பூரணை வரையும், பூர்வ பட்சமும், பூரணையை அடுத்த பிரதமை முதல் அமாவாசை ஈறாக அபரபட்சமும் ஆகும்.

| பூர்வபட்ச (வளர்பிறை) | | அபரபட்சை (தேய்பிறை) |
|---|---|---|
| வளர்பிறை | 1. பிரதமை | தேய்பிறை |
| வளர்பிறை | 2. துவிதியை | தேய்பிறை |
| வளர்பிறை | 3. திருதியை | தேய்பிறை |
| வளர்பிறை | 4. சதுர்த்தி | தேய்பிறை |
| வளர்பிறை | 5. பஞ்சமி | தேய்பிறை |
| வளர்பிறை | 6. ஷஷ்டி | தேய்பிறை |
| வளர்பிறை | 7. ஸப்தமி | தேய்பிறை |
| வளர்பிறை | 8. அஷ்டமி | தேய்பிறை |
| வளர்பிறை | 9. நவமி | தேய்பிறை |
| வளர்பிறை | 10. தசமி | தேய்பிறை |
| வளர்பிறை | 11. ஏகாதசி | தேய்பிறை |
| வளர்பிறை | 12. துவாதசி | தேய்பிறை |
| வளர்பிறை | 13. திரயோதசி | தேய்பிறை |
| வளர்பிறை | 14. சதுர்த்தசி | தேய்பிறை |
| பூரணை | 15. பூரணை/ அமாவாசை | அமாவாசை |

**கரணம்:** பவம், பாலவம், கௌலவம், தைதுலம், கரஜம், வணிஜம், பத்திரை, சகுணம், சதுஷ்பாதம், நாகவம், கிம்ஸ்துக்னம்.

**தனிசஷ்டா பஞ்சமி (பஞ்சமி தோஷம்)**

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய ஐந்து நட்சத்திரங்களிலும் மரணம் சம்பவித்தால் தனிஷ்டா பஞ்சமி தோஷம் உண்டாம்.

| | | |
|---|---|---|
| அவிட்டத்திற்கு | - | 6 மாதம் |
| சதயத்திற்கு | - | 3 மாதம் |
| பூரட்டாதிக்கு | - | 1 1/2 மாதம் |
| உத்தரட்டாதிக்கு | - | 1 மாதம் |
| ரேவதிக்கு | - | 15 நாள் வரை |

தனிஷ்டா பஞ்சதக் குற்றமாகும். இந்த நட்சத்திரத்தில் ஒருவர் இறந்தால் பூதவுடலுடன் தென்னம்பிள்ளை, வாழைக்குட்டி ஏதாவது ஒன்றைச் சேர்த்து மயானத்திற்குக் கொண்டுசென்று தகனம் செய்ய வேண்டும். பின்பு வீட்டில் பஞ்சமி தோஷம் சாந்தி செய்யலாம். இதுவே பஞ்சமி தோஷம் என்பர். ஆனால் பஞ்சமித் திதியில் எதுவித தோஷமும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈர விழிகளுடனும், கனத்த இதயத்துடனும்...

தோற்றம்
02 ◈ 02 ◈ 1916



மறைவு
14 ◈ 05 ◈ 2011

அமரர்

## திருமதி இராஜரட்ணம் பராசக்தி

குல விளக்காக இருந்த எங்கள் குடும்ப தீபமே - இன்று
குலதெய்வமாய் ஆகிவிட்டீர்களே!
வீடு தேடி வருபவர்களுக்கு விருந்தோம்பி - அவர்தம்
நாடிக்குறிப்பறிந்து நலம்விசாரிப்பீர்களே!
பட்டங்கள் பெற்றதில்லை எப்பதவியும் வகித்ததில்லை
தொட்டதெல்லாம் துலங்கும் உங்கள் கை பட்டாலே!
சீரிய நெறிமுறையும் சிக்கனமும் சொல்லித்தந்து - நாங்கள்
வீரியமாக வாழ வழிகாட்டினீர்களே!
ஆலமரமாய் நின்று அறிவுரைகூட்டி - எங்களை
சீலமாய் இருஞாலத்தில் சிறக்க வைத்தீர்களே!
சைவமதை மதமாகக் கொண்டு
சமயத்தொண்டுகளை சிறப்பாகச் செய்து - இன்று
தெய்வத்தின் திருவடிகளை தரிசிக்க விரைந்து சென்றீர்களோ?
உறவுகளுக்கோர் பாலமாய் ஊரிற்கோர் உத்தமியாய்
சிறப்புகள் பல பெற்று செம்மையாய் வாழ்ந்தீர்களே!
குலாலயத்தைக் காப்பவள் தெய்வ அன்னை பராசக்தி - எம்
குடும்பத்தைக் காப்பவள் எங்கள் அன்னை பராசக்தி
செல்விருந்தோம்பி வரும்விருந்து காத்திருக்கும் அன்ன பூரணியே!
இம்மைச் சேவைதனை நிறைவேற்றி
மறுமையில் சேவை செய்ய விரைந்தீரோ!
விழிகள் குளமாயின! இதயம் ரணமானது!
எமக்கு ஈடுசெய்ய உம்மைப்போல யாருண்டோ இப்பாரினிலே!

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

ஈ-விழிகளுடன்
**பேரப்பிள்ளைகள்**

Harikanan, Jaffna

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
02
◈
02
◈
1916



மறைவு
14
◈
05
◈
2011

அமரர்

## திருமதி இராஜரட்ணம் பராசக்தி

அவர்கள்

ஆயிரம் பிறை கண்ட அன்னையே
உன் ஆயுளின் ரகசியம் தான் என்ன
தமிழச்சியாய் பிறந்து எப்படித்தான்
வாழ முடிந்தது
நீ வீரத்தாய்.

ஆயிரம் ஆயிரம்
எம் உறவுகள் ..... ?.....?.....?

உலக நாடுகளின் தேர்தல்களில்
தமிழனின் போஸ்மோட்ட அறிக்கைதான்
தேர்தல் விஞ்ஞாபனம்
அவர்களின் வெற்றிக்கு நாங்கள்
எம் வெற்றிக்கு .....

இன்று எம் வாழ்வில் மறக்க முடியாத நாள்
எம் இதயங்களை உறைய வைத்து
நடைப்பிணமாக்கிய அந்நாள்
எம்மையெல்லாம் உலகம் கைவிட்ட நாள்

அன்று உம் உயிரைக் காப்பாற்ற முடியாத உலகம்
இன்று எம் போஸ்மோட்ட அறிக்கையுடன்
எம் பிணங்களைக் காவல் காக்கின்றது

சென்று வா தாயே
அங்கு பலர் காத்திருக்கின்றார்கள்
உனை வரவேற்க
அங்கு எங்கள் ஆட்சிதான்
ஏனெனில் நாங்கள் தான் பெரும்பான்மை

அவர்கள் எம் நலம் விசாரித்தால்
செப்பிடு தாயே "கண்ணீருடன்"
நாங்கள் யாவரும் இங்கு நலமுடன்..!

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.*

**கொக்குவில் மேற்கு வாழ் மக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் துளிகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 | 14 |
| 02 | 05 |
| 1916 | 2011 |



அன்பின் உறவிடமே பண்பின் இருப்பிடமே
பாசத்தின் மையமே குடும்பத்தின் சிகரமென திகழ்ந்தீர்கள்
கலங்கரை விளக்கம் போல மிளிர்ந்தீர்கள்
கலங்கினோம் தலைவிதி இதுவோ என்று
எம்மையெல்லாம் போற்றி நின்றீர்கள்
வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்து நின்றீர்கள்
நேற்றுவரை எம்மோடு கூடியே
அறிவு வார்த்தைகள் பலபேசி நின்றீர்கள்
இன்று எமையெல்லாம்
சோகக்கடலில் ஆழ்த்திவிட்டு சென்றீர்கள்.

எமது விளையாட்டுக்கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினரும் இவ் ஆண்டின் பொருளாளருமாகிய லயன் M வரதராஜா MJF அவர்களின் பாசமிகு மாமியார்

*அமரர்*

## இராஜரட்ணம் பராசக்தி

அவர்கள்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

துயர் பகிரும்

**லெவின் ஸ்ரார் விளையாட்டுக்கழகம்**

உபதபாற்கந்தோர் வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில் 02 ◈ 02 ◈ 1916



ஆண்டவன் அடியில் 14 ◈ 05 ◈ 2011

ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலயப் பொருளாளர் இ. தயாநிதி அவர்களின்
அன்புத்தாயார்

## அமரர் இராஜரட்ணம் பராசக்தி

**அவர்களுக்கு எமது விழிநீரைக் காணிக்கையாக்குகின்றோம்.**

பண்போடும் பாசத்தோடும் எம்மோடு
இணைந்து அன்புடன் வாழ்ந்தவரே
நீர் எம்மைவிட்டு மறைந்து சென்றாலும்
உம் பிரிவுத்துயரம் தாங்காது விம்மி அழுகின்றோம்.
நெஞ்சோடு உம் நினைவு நித்தமும்
உறவாட வைத்துச் சென்றீரே!
எம் அருகில் இணைந்து நிற்கும்
உணர்வுடன் அல்லவா ஏங்குகின்றோம்
உமது பாச நினைவுகள் என்றும்
எம்மைவிட்டகலாது. கண்ணீருடனும்
பற்றோடும் உங்களது ஆத்மா சாந்திக்காக
இறைவனை என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**பிடாரி அம்பாள் ஆலய பரிபாலன
சபையினரும், இந்து இளைஞர் மன்றமும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்

தங்கள் குடும்பத்தினராகிய **திருமதி இராஜரட்ணம் பராசக்தி** அவர்களின் மறைவுச் செய்தியினால் எமது ஆழ்ந்த கவலையைத் தங்களுடன் பகிர்ந்து கொள்வதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா இறைவன் திருப்பாதம் அடைந்து இணையில்லாப் பேரின்ப முத்தியடைய இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்து இவ்வுலகு.
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும் - குறள் -

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு சேவை**
**முகவர் தபாலகம்**
**இல. 303, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல. 021 222 5392**

**தங்கள் துயரினைப் பகிர்ந்து கொள்ளும் உரிமையாளரும், சக ஊழியர்களும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கண்ணீர் அஞ்சலி
அமரர்
திருமதி பராசக்தி இராஜரட்ணம்
மலர்வு
02.02.1916
உதிர்வு
13.05.2011
"தாய்மைக்குப் பாத்திரமாகி,
தூய்மைக்கு இலக்கணம் வகுத்து,
வாய்மைக்கு வரைவிலக்கணம் - தந்து,
மறுமைக்குச் சென்றதேனோ?"
பொன்னையா வீதி,
ஆனைக்கோட்டை.
நினைவுகளுடன்:
உன் மக்கள்.

# நாவெழா நன்றி நவிலல்

- 13.05.2011 வெள்ளிக்கிழமை இரவு பூர்வபக்க ஏகாதசித் திதியில் இறைவன் திருவடியை எய்திய எங்கள் இல்லத்து ஒளிவிளக்கு அமரர் இராஜரட்ணம் பராசக்தி அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தவர்கள், வீட்டில் வந்து ஆறுதல் கூறி வேண்டிய உதவிகளைப் புரிந்தவர்கள்,



- மலர் வளையம் வைத்து மலரஞ்சலி செலுத்தியவர்கள்,
- தந்தி, தொலைபேசி, தபால் மூலம் உள்ளூரில் இருந்தும் வெளியூரில் இருந்தும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டவர்கள்
- மரணச் செய்தியை உரிய நேரத்தில் விளம்பரம் செய்து உதவிய உதயன், தினக்குரல் பத்திரிகை ஸ்தாபனத்தினர்
- கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வெளியிட்ட அன்பர்கள்
- பரமன் புகழ் பாடியவர்கள், அனைத்துக் கிரியைகளை நடாத்திவைத்த அந்தணப் பெருந்தகையினர்
- இறுதி ஊர்வலத்தின்போது பங்குகொண்டு சிறப்பித்த உற்றார், உறவினர், நண்பர்கள்
- இம் மலர் சிறப்பு அமைய ஆக்கங்களைத் தந்து உதவியவர்கள்
- அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனநிகழ்விலும் கலந்து சிறப்பித்த அன்பு நெஞ்சங்கள்

- "சக்தி தீபம்" என்ற இந்த நினைவு மலரை அழகுற அச்சிட்டுத் தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத் தினர் அனைவருக்கும்
- இன்னும் எவருக்காவது நன்றி சொல்லத் தவறி யிருப்பின் அவர்கள் அனைவர்க்கும் எம் நாவெழா நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**

"காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச

## *திரவியம் + *இர

* சிவயோகநாயகி
+
* சபாரட்ணம்

- பிரேமாவதி + உதயன் → சுதாகரன், அர்ச்சுன்
- கமலாவதி + பூலோகசிங்கம் → கீர்த்தி
- கிருஷ்ணகுமார் + சியாமினி → கௌஷிகா, ஹம்சிகா, கிருஷிகா
- நந்தகுமார் + கமலினி → ஹரிஷ், ஆகாஷ்

* அரு
தங்

- யசோதரா + போலிங்கம் → கோபிசாளினி
- கி

- தையல்நாயகி + வரதராஜன் → தயானுஷா + ராஜ்குமார் → ரூபிதன், ராகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...சாவழி

## ...ராஜரட்ணம் + *பராசக்தி

...ஞானானந்தம்
+
...கேஸ்வரி

முரளிதரன்
+
ரதிதேவி
கிருஸ்ணப்பிரியா
கார்த்திகன்

கங்காதரன்
+
ராகினி
துளசி
துசிந்தன்

இராஜேந்திரன்
+
குமுதினி
அஜந்தா
பிருந்தா

பிரபாகரன்
+
கோணேஸ்வரி
துசீபன்
நிதுஜனன்

தில்லைநாயகி

கருணாநிதி
+
ரதிதேவி

துஷ்யந்தி
+
ரஜீவன்

ஜனார்த்தன்

மகாலட்சுமி
+
செல்வநாயகம்

தயாநிதி
+
புஸ்பராணி
ஜதிசங்கர்
கஜேந்திரன்
துவாரகன்

குணாநந்தன்
+
சிவநாயகி
தனுஷா
உதயணன்
கார்த்திக்
பிரசன்னா

* அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவிருக்கட்டும், நிகழ்ச்சிகள் முன்பே நிச்சயிக்கப்பட்டவை !

எதற்கும் வருத்தப்படவேண்டாம். உங்களுடைய கடந்தகால அனுபவங்களில் இருந்து நீங்கள் பாடங்களைக் கற்றுக் கொள்ளுங்கள். அந்தப் பாடங்களை அடிக்கடி நினைத்துப் பாருங்கள். அந்தப்பாடங்கள் உங்கள் எதிர்காலச் செயல்களுக்கு வழிகாட்டியாக அமையட்டும். ஆனால் கடந்தகாலத்தைப் பற்றிக் கவலையில் மூழ்காதீர்கள். நான் அப்படிச் செய்திருந்தால் இப்படி ஆகியிருப்பேன். இப்படிச் செய்திருந்தால்.. என்று எண்ணுவதெல்லாம் வீணான சிந்தனையாகும். நேரம் வீண். சக்தி வீண் ஏனெனில் கவலை சக்தியைக் கரைத்து விடுகிறது. வேறு எதுவும் அது செய்வதில்லை.

உண்மை எதுவெனில், எது நடந்ததோ அது அப்படித்தான் நடக்க வேண்டும் என்பது இறைவனின் திட்டம். அதற்கு மாறாக அது நடந்திருக்க முடியாது. ஒரு சிறு துகளின் அசைவு முதல் பிரபஞ்சத்தின் பிரமாண்டமான இயக்கம் வரை. கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் எல்லாம்வல்ல, எல்லாம் அறிந்த, எங்கும் நிறைந்த பரம்பொருளின் அருளால் இப்படித்தான் நிகழ வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. நிகழ்ச்சிகள் எவ்வாறு நிகழவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அவ்வாறு நிகழ்கின்றன. அவன் கணக்குப்படியே அனைத்தும் நிகழும். கடவுளின் விருப்பத்தை மாற்ற எந்த மனிதனாலும் இயலாது. நிகழ்வது நிகழ்ந்தே தீரும் என்பது பிரபஞ்சமெங்கும் உள்ள ஒரு உண்மையாகும். கவலைப்படுவது, வருந்துவது என்பது உங்கள் கோழைத்தனத்தை வெளிப்படுத்தி, ஒன்றுமில்லாத, ஒன்றிற்காக உங்கள் மன அமைதியைக் குலைத்துக் கொள்வதைக் குறிக்கும். ஒவ்வொரு நிகழ்விலும் இறைவனின் திருவருள் இலங்குகிறது என்பதைக் கண்டு உணர்ந்து, உங்களுக்குள்ளும் உலகத்துடனும் அமைதியாக வாழ்வதே அறிவுடமை ஆகும்.

– சுவாமி சிவானந்தா –

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org